**தத்துவஞானி அரிஸ்டாட்டில்**

**வாசிக்க**: **மத்தேயு** 5,6,7 **அதிகாரங்கள்**

கிரேக்கத்தின் முதல் தத்துவஞானி சாக்கிரட்டீஸ். இரண்டாவது தத்துவஞானி பிளேட்டோ. மூன்றாவது தத்துவஞானி அரிஸ்டாட்டிலாகும். இவர் கி.மு 384 ல் பிறந்தார். இவருடைய தந்தையார் மருத்துவர் ஆவர். மசிடோனியா மன்னன் அமயிண்டாஸின் தனிப்பட்ட வைத்தியராக கடமையாற்றினார். அமயிண்டாஸ் அலெக்சாண்டரின் பாட்டனாராவார். அரிஸ்டாட்டில் தனது 17 வது வயதில் எதென்ஸ் நகரில் உள்ள பிளேட்டோ அகடமியில் கல்விகற்றார். அங்கு 20 வருடங்கள் கல்வி கற்றதாக சொல்லப்படுகிறது. இவருடைய ஆசானாகிய பிளேட்டோவால் அறிவுக்களஞ்சியம் என்று புகளுமளவுக்கு இவருடைய அறிவாற்றல் இருந்ததாம். பல்துறைசார்ந்த வல்லுனராயிருந்தார். அரசியல், மொழி, நாடகம், கவிதை, விஞ்ஞானம், உயிரியல், விலங்கியல், பொருளியல் போன்ற துறைகளில் தேர்ச்சி பெற்றவராவார். எதென்சில் லைசியம் என்ற பெயரில் கி.மு 335ல் சொந்த பள்ளிக்கூடத்தை தொடக்கினார். இவரின் புத்திக் கூர்மையை அறிந்த மன்னன் இரண்டாம் பிலிப் தனது மகன் அலெக்ஸ்சாண்டருக்கு கல்வி கற்பிக்க பணித்தார். இவர் நானூறுக்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதினார். அரிஸ்டாட்டிலை அறிவுஜீவி, விஞ்ஞானி, புத்திசாலி என உலகம் போற்றியது. சரீரத்தில் நோய்வாய்ப்பட்டு கி.பி 335ல் தனது 62வது வயதில் மரித்தார்.

**கேள்வி**:

உலகம் போற்றுதலுக்குரியவர்தானா அரிஸ்டாட்டில்?

**பதில்**:

கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது; கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிறதுமாயிருக்கிறது. சங்கீதம் 19:7. விரல்விட்டு எண்ணக்கூடி ஒருசிலரின் அறிவுபூர்வமான கருத்தை உலகம் மேன்மையாக கூறும். ஆனால் கர்த்தரால் பேதையையும் ஞானியாக்கக் கூடும். வேதப்புத்தகத்தில் அறிவியல் விஞ்ஞானம் தத்துவம் கணிதம் பொருளியல் என அனைத்து துறையும் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆதியாகமம் 9:4 ல் மாம்சத்தை அதின் உயிராகிய இரத்தத்தோடே புசிக்கவேண்டாம். இரத்தத்தில் உயிர் இருக்கிறது என்பதை மோசே 3600 ஆண்டுகளுக்கு முன் சொல்லிவிட்டார். ஆனால் விஞ்ஞானம் மறுத்தது முதலில் இருதயத்தில் உயிர் இருக்கிறது என்றது. இதய மாற்று சிகிச்சை செய்யும் நிலை வந்ததும். இல்லை உயிர் மூளையில் இருக்கிறது என்றார்கள். மூளை செயல்பாட்டை இழந்த பின்னும் உயிர் வாளக்கூடிய நிலை வந்ததும். இப்போது ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். இரத்தத்தில் உயிர் இருக்கிறது என்று. உலகத்தில் வாழ்ந்த தத்துவ ஞானிகள் சொன்னவற்றை விட பல மடங்கு சிறந்த தத்துவங்களையும் வாழ்க்கைக்கு தேவையானவற்றையும் வேதம் சொல்லியிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் மலைப்பிரசங்கத்தை மத்தேயு 5,6,7 அதிகாரத்தில் படிக்கலாம். இப்பிரசங்கத்தை மிஞ்சிய தத்துவமோ கருத்தோ இந்த உலகத்தில் இல்லவே இல்லைப் பிள்ளைகளே. நீங்களும் மாதத்தில் ஒருதடவையேனும் மலைப்பிரசங்கத்தை படிக்க வேண்டும். கிறிஸ்துவுக்காக வாழ்ந்து உலகுக்கு உபயோகமாயிருந்து. பரலோகத்தில் கர்த்தரோடு நித்தியகாலம் வாழுவோமாக. ஆமென்

ஒன்றையும் வாதினாலாவது வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். பிலிப்பியர் 2:3

**ஜெபம்**

பரலோக தகப்பனே இன்றைய பாடத்துக்கு நன்றியப்பா. நீரே பெரியவர், உயர்ந்தவர் சர்வவல்லவர். உம்மாலேயே அனைத்தும் உண்டானது. உமக்கே மகிமையும் கனமும் மாட்சிமையும். ஆமென்